DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 95/2018**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : மாணிக்கம்
Father/ Husband Name : பாக்கியம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் திருவேகம்பத்தூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் 1வது எதிரியை தெரியும். கடந்து 01.02.2014ம் தேதி காலை 10.00 மணிக்கு வேலைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அ.சா.1 நகையை அறுத்துவிட்டு செல்கிறான் என கத்தினார். நானும், சாட்சி.1ம் சென்று பார்த்தோம். ஆஜர் 1வது எதிரி அ.சா.1யின் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடினார், நாங்கள் துரத்தினோம். அவர் வெள்ளைக் காரில் ஏறி உச்சாணிப் பக்கம் சென்றார். விரட்டிப் போனோம் ஆனால் எங்களால் அவரைப் பிடிக்க முடியவில்லை. போலீசார் என்னை 08ம் தேதி விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.1யின் செயினை அறுத்த போது நான் பார்த்தேனா என்றால் இல்லை, சத்தம் போட்டதை கேட்டு தான் சென்று பார்த்தேன். நான் பார்த்த போது எதிரி செயினை அறுத்து ஓடி காரில் ஏறுவதைப் பார்த்தேன். அந்த காரின் பதிவெண் தெரியாது. அ.சா.1 சத்தம் போட்ட போது கார் அந்த இடத்தில் தான் நின்றுக் கொண்டிருந்ததா என்றால் நான் பார்க்கும் போது வண்டி போய்க் கொண்டிருந்தது. 1வது எதிரி அ.சா.1யின் செயினை அறுக்கவில்லை என்றும்

அ.சா.1க்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1.** காரில் எத்தனை பேர் இருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 எனது உறவினர் ஆவார். இந்த வழக்கிற்கும் 2வது எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 95/2018**

Deposition of witness for Prosecution அ.சா.4

Name : ராமசாமி
Father/ Husband Name : சிதம்பரம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் பக்கத்தான்குடியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி மனைவி ஆவார்.சுமார் 5முதல் 7வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 09.00- 10.00 மணியளவில் நான் திருவேம்பத்தூர் போவதற்காக வந்து கொண்டிருந்தேன் அப்போது அ.சா.1 செயினை அருத்துவிட்டு ஓடுவதாக சத்தம் போட்டார். அதனால் நான் பின்னாடி ஓடினேன். அதற்குள் காரை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார்கள். திருடியவர்களை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆஜர் 1வது எதிரியை எனக்கு தெரியாது.

**(2வது எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)**

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 95/2018**

Deposition of witness for Prosecution அ.சா.5

Name : ஆறுமுகம்
Father/ Husband Name : சிதம்பரம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் பக்கத்தான்குடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த 01.02.2018ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் ஊரில் இருந்தபோது என் மனைவி களை எடுக்க போய்க் கொண்டிருந்தார். என் மனைவி களை எடுக்கும் போது செயினை அறுத்துக் கொண்டு போனதாக என்னிடம் தகவல் சொன்னார். நான் சென்றுப் பார்த்தேன். திருடியவர்கள் வெள்ளைக் காரில் சென்றதாக சொன்னார்கள். புகார் அளிக்க அ.சா.1ஐ காவல் நிலையம் அழைத்துச் சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 95/2018**

Deposition of witness for Prosecution அ.சா.6

Name : வாசுதேவன்
Father/ Husband Name : செல்வராஜ்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் திருவேகம்பத்தூரில் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். கடந்த 08.02.2018ம் தேதி மதியம் 02.00- 03.00 மணியளவில் ஆனந்தூர செல்கிற மெயின் ரோட்டில் நான் ஒரு வேலையாக சென்றுக் கொண்டிருந்த போது திருவேகம்பத்தூர் போலீசார் நகை திருடுபோனது சம்பந்தமாக என்னிடம் விசாரித்தார்கள். விசாரித்துவிட்டு பேப்பரில் வரைப்படம் போட்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் படித்துக் காண்பித்தார்கள். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் நகை திருடுபோனது சம்பந்தமாக கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஆமாம், அந்த இடத்திற்கு வரைப்படம் தயாரித்ததற்கு கையெழுத்து வாங்கினார்கள்.

**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது. அ.சா.1 எனது உறவினர் ஆவார், எனக்கு அத்தாட்சி முறை ஆகும். ஆனந்தூர் சாலை எப்போது கூட்ட நெரிசல் உள்ள சாலையா என்றால் ஆமாம். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் என்ன எழுதி உள்ளது என்று தெரியாமல் போலீசார் கேட்டுக் கொண்டதற்காக கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 95/2018**

Deposition of witness for Prosecution அ.சா.7

Name : மலைராஜ்
Father/ Husband Name : கணபதி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் பக்கத்தான்குடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு திருவேகம்பத்தூர் போலீசார் துடியனி விலக்கு அருகே ஆனந்தூர் ரோட்டில் சங்கிலி அறுத்துக் போனது தொடர்பாக போலீசார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மகஜர் தயார் செய்து கையெழுத்து கேட்டார்கள், நான் கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் போலீசார் எனக்கு படித்துக் காண்பித்தார்கள். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. பார்வை மகஜரில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் இல்லை, படித்துக் காண்பித்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து போலீசார் என்னிடம் எழுதி தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1.** அ.சா.1 எனது தங்கை முறை ஆவார். ஆனந்தூரில் ரோட்டில் துடியனி விலக்கில் போலீசார் கேட்டுக் கொண்டதால் தான் கையெழுத்து

போட்டேன் என்றால் சரிதான். பார்வை மகஜரில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் இல்லை, படித்துக் காண்பித்தார்கள். 2வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், அ.சா.1 எனது தங்கை முறை என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.